
ஆன்ம உணர்வும்
(ஸ்வய ஞானுபவம்)
இதழ் 3
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# ஆன்ம உணர்வும்

(ஸ்வய ஞானுபவம்)

## இதழ் 3

**வெளியீடு :**

அன்பின் குடில்,

253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,

கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,

பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,

தமிழ்நாடு - 638 311

போன் : (04256) 229655

முதற்பதிப்பு : குரு பூர்ணிமா ஜூலை 2010
இதழ் 3
350 பிரதிகள்

அச்சிட்டோர்:

ஆரித்ரா பிரிண்டர்ஸ்,


பெங்களூர் - 560 003.

தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| 1. | ஆன்ம உணர்வு (ஸ்வய ஞானானுபவம்) பாடல்களும் கருத்துரையும் | 217 |
| 2. | நிதாகனின் அனுபவம் | 237 |
| 3. | நிதாகனின் வைராக்கியம் | 285 |
| 4. | வேறுவின் விளக்கம் | 314 |
| 5. | முடிவுரை | 324 |


எல்லாம் நீ!



சிவவாக்கியர் பாடலின் உட் கருத்து:-

வேத சாஸ்திரங்களும் மற்றும் அனைத்து நூல்களும்,
துவைதமாக (இரண்டுபட்ட நிலையில்)
சொல்லுவதாவது அதாவது நாமரூப, ஸ்ரீ பகவானையும்,
அவனை அடையும் வழிமுறையாகிய, பக்தியையும்,
சொல்லுவதாலும், மற்றும் ஜாதி, (இனம்) மதம்,
பாஷை, (மொழி) நாடு, என நீதிமுறைகளையும்,
சொல்லுவதால், இவை அனைத்துமே, பேதாபேதமாக
வும், அதனால் விருப்பு வெறுப்பாகவும், அதனால்
குற்றம் குறையாகவும், அதனால் புண்ணிய பாவம்
ஆகவும், அதனால் ஜனனமரண பிறவிப் பிணியையும்
உணர்த்துவதால், வேறு எந்த வழிமுறையும் வேண்டாம்
ஆனால்?
இவை அனைத்தும், அந்த ஒன்றிலிருந்து வந்ததே.
ஆனால் அந்த ஒன்றில் இவை அனைத்தும் இல்லை.
ஆகவே அதுவே நாம், நாமே அது, என்ற ஸ்வய
அனுபவத்தினால், அம்மாவே சுகமாகவே இருப்பாயாக.




218

104 வது

பாடலின் ரகசிய தெளிவு:- அறிந்து
வேதம்! சாஸ்திரம்! புராணம்! இதிகாசம்!
ஆகமம்! மற்றும் அனைத்து நூல்களையும்!
உள் ஆழ்ந்து கருத்துடன் உணராமல்,
வெளி நோக்குடன் படித்தாலும்! கேட்டாலும்!
அவை புண்ணிய பாபம்! தொடர, பிறவிப்
பிணியைத் தான்! கொடுக்கும் இது சத்தியம்.


106 தன்னிடையே தானாகத் தனிப்பதற்கு,
தனக்கயல் போல் தோற்றியிடும் தோற்றமெல்லாம்,
அன்னியமாய் ஒருகாலும் இல்லையென்றும்,
அறிவுருவே ஆன்மாவாம்! அதுநானே என்றும்
பின்னமில்லா அகண்டபர நிச்சயத்தை,
பெறுவதுவே காரணமாம். ஆதலாலே,
பன்னியவாறு அகண்டபர நிச்சயத்தை.
பற்றியதால் பகுப்பற்ற பரமேயாவாய்.



219

கருத்து:- உன்னில், நீ, உறுதியாக நிலைத்து நிற்க வேண்டுமானால், உனக்கு அன்னியமாக காணும் எல்லா உயிரினங்களும், அனைத்து தாவர வர்க்கங்களும், உன் உறவு, சுற்றம், நட்பு, ஒதவிய ஜீவ சொரூபங்களும், நீ கண்டும், கேட்டும், தொடுத்தும், வாங்கியும், அனுபவநிலையில், நாம ரூப, பொருள்கள் எல்லாம், எ ல் லா ம், ம ண் ணே, அநு ப ர மே, அதுயாமே, என உறுதி நிச்சயம் பண்ணுவாயாக.


இப்படி உறுதி நிச்சயம், பண்ண விடாமல் தடுப்பது:- இதுகாவபரியந்தம், இவ்வுலகையும், உறவையும், அதில் இதுவரை நடைபெற்ற, தொடுக்கல் வாங்கலும், போக்குவரவும், இவை அனைத்திலும் ஏற்பட்ட, வா ப ந ஷ் ட, ப ற் று வ ர வு, இவற்றின் வினையின், புண்ணியபாவம், தொடர்கதையாக தொடர்ந்து உ(உன்)...ள்...ம(மன)...(திரை)ன...தா...ல், பிடித்து அகற்ற முடியாத, கறைபட்டுபோன தன்மையால்.



220

அதுவே, பெருந்தடையாக இருக்கிறது.
இத்தடை நீக்கம்! அஸாத்திய பொறுமையாலும்;
இறை & குரு! பரிபூரண நம்பிக்கையாலும்;
தைலதாரையைபோல், தடையற்ற அப்யாசத்தாலும்;
எதிர்ப்போ! எதிர்பார்ப்போ!
இல்லாது! எல்லாம் நலமே! எல்லாம் நலமே! எல்லாம் நலமே!
என்ற பரிபூரண நிறைவால்! மட்டுமே
பெற முடியும். என வாழ்த்தி ஆசி வழங்குகிறேன்.


107 நிச்சலமாம் நிச்சயமே அகண்டானந்தம்;
நிலைபெற நிகரற்ற ஏதுவாகும்.
உச்சமதாம் நிச்சயமே செய்யச் செய்ய
செய்யச் செய்ய! செய்யச் செய்ய! செய்யச் செய்ய!
உலகு ஒழுகல் துவைதத்தின் தோற்றம் நீங்கும்.
துச்சமதாம் துவைதத்தின் தோற்றம் நீங்கில்;
துகளற்ற ஆனந்தம் ஸ்வயமாய் தோன்றும்.
அச்சமில்லா நிச்சயமே செய்து இங்கு அதனால்;
அகண்ட பரம ஆனந்தம் அடைந்து வாழ்வாய்.



221

கருத்து :- மேலே கூறிய நிலையில், ஸ்வய அனுபவமாக!
அச்சமற்ற! அசைவற்ற!
ஆசையற்ற! பயமற்ற!!!
உறுதி நிச்சயம்! செய்தால்!
முறையோடு சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்!
வாய் ஞானமில்லாமல்! அனுபவ ஞானமானால்!
(1) ஜக ஜீவ! உறவு சுற்றம் நட்பு! மற்றும்
அனைத்தும், உன் பார்வையை! விட்டு
(ஏகியோர்க்கல்லு)
மட்டும்! இயக்கம் அற்று, இயல்பாக மறையும்.
அப்படி தோன்றினாலும், திரைக்காட்சி போல்,
உனக்கு மனதில் வராத தன்மையால், அறிவின்
சாட்சி நிலையில், குணதோஷமற்று தோன்றும்.

(222)




அங்கு நடைபெறும் காட்சியிலும் இன்பதுன்பம் நேருது.
உன் அறிவிலும் நடைபெறுவதில், " " ".
அங்கு ஏன்? எதற்கு? எப்படி? என்ற நிலையில்
சந்தேக, கலக்க, குழப்ப, பயம்! அஞ்ஞானந்தம் சேர்க்கும்.
அந்த சாட்சியமானவனையில், ஸ்ரீ பகவானே!
நீ யா கி வி ட் ட! தன்மையால்,
எக்காட்சியும் இல்லாத ஸ்வய ஆனந்தம்!
பயிற்சி முயற்சி! இல்லாமல் இயல்பாக பெற முடியும்.

(2) இந்நிலையில், சர்வ சாட்சியாகிய பேரறிவு!


படிப்படியாக! படிப்படியாக!! படிப்படியாக!!!
பயிற்சி முயற்சி இல்லாமல் அறிவு! பேரறிவாக!
மாறும் நிலை பெறும். அந்நிலையில் பிராரப்தத்தின்
தாவ சஞ்சாரம்! இயல்பாக நடைபெறும்.
அதாவது அத்தாவத்திற்கு தேவையான!
உணவு! உடை! இருப்பிடம்! ஆகிய இம்
மூன்றும், யோகமாயாவின் திறமையால்.

223




யோகமாயா!

↑ இயற்கையின் (ஸ்ரீபகவானின்) நிலையிலும்.
திசையின் காவலர்களாகிய, அஷ்டதிக்
பாலகர்கள்! நிலையிலும், எக்கர்மமுமின்றி.
இயல்பாக! எளிமையாக!
சேமிப்பு இல்லாத நிலையில், அவ்வப்போது!
தானே கிடைக்கும். மனம் இல்லாத் தன்மை
யால், ஓர் திருப்தியின் ஆனந்தம்! அறிவு
நிலையில்! பெற முடியும். அந்நிலையில் மெய்யும்
ஜீவ உபகாரமானது!
எந்த வித எழுச்சியும்! வீழ்ச்சியும்! இராது.
குறிப்பு :- அந்நிலையில் ஆண்! பெண்! குழந்தைகள்
பேதம் தோன்றாது. அதை அறிவு எப்படி உணரும்
என்றால், இயக்கம் உள்ள அவன்! நிலையில்
இயக்கம் அற்ற அது! இறைவா! கருணையில்,



224


நடைபெறுகிறதென, ஸாங்கியன்!
அமைதியானது! மௌனானந்தமாய்! இயல்
பாக அனுபவிக்க முடியும்.
84 லட்சம்! ஜீவ கோடிகளிலும், எவ்வா
ஜட! உலகம் பூதங்கள் தோற்றம் கட! அகில ஜீவ சஞ்சாரிகள் படைப்புகளிலும்! ஞாயிறு திங்கள்
நாமே இருக்கிறோம். என்றபேருணர்வுறவு!
எவ்வாம்! இயங்கமற்ற
மண்! பரசாரூபமாக தோன்றும்!
உணர்வும்!
ஒன்றானது!
வெற்ற பரப்பிரம்மானந்தம்!
எளிமையாகவும்! இயல்பாகவும்!
சாஸ்வதமாகவும்! சுகமாகவும்! சுயம்மாகவும்!
அகண்டானந்த! நிறைவு அனுபவிக்கிறோம்.
ஸ்யில்



மாதவனே! இந்நூலைக் கேட்கத் தக்க
மாசற்ற மாணாக்கன்! அரியவன் தான்.
சாதகமாய் இந்நூலை உபதேசிக்கும்
ஸத்குருவும்! சாலவுமே அரியவன் தான்.
வேதமுறு இந்நூலின் புஸ்தகத்தை
பெற்றவரும்! மெத்தவுமே அரியவராவர்.
ஓதிய இவ் வேதவிளைவு இந்நூல் எங்கும்
உரமாக பிரசித்தி மேவவில்லை.

கருத்து :- (1) மண்! பெண்! பொன்! பணம்
ஆகிய மூவாசையில் சிக்காதவன் இல்லை.
பாடம்! படிப்பு! பட்டம்! பதவி! அந்தஸ்து!
கௌரவம்! புகழ்! என்ற கவி தோஷத்தில்!
மூழ்காதவன்! இல்லை.
பொறுமை! பணிவு! அன்பு! கனிவு! கருணை!
குற்றங்களை மறத்தல்! மன்னித்தல்! விட்டுக்கொடுத்தல்!


226



இவைகளை பெரும்! இ றை & கு ரு!
உணர்வின், நம்பிக்கையில், வைராக்கியம்!
என்னும், க ல் வி யை! ஏற்பவன் இவரே.
ஜீவனத்தால்! தோன்றும், போட்டி & பொறாமை!
யில், ஈடுபடாதவன் இவரே.
வாழ்க்கை வாழ்வதற்காக இவ்வளவே இவரே.
என்றும்,
வாழ்க்கை சாதனைக்கே என அன்புடனும்!
பணிவுடனும்! ஏற்பவன் இவரே.
லௌகீகமோ! தெய்வீகமோ! வியாபாரம்!
விளம்பரம்! ஆடம்பரம்! இவைகள், ஓர் விஷம்
என தள்ளுபவன் இவரே.
வாதம்பண்ணும் நிலையில் எ திர் ப் பு ம்!
பக்தியிலும், ஞானத்திலும் எ திர் பா ர் ப் பு ம்
கொள்ளாதவனிவரே.
வேதாந்தம் என்னும், சுத்த அத்வைதத்தை!


அமைதி வேண்டாம்! ஆடம்பரம் வேண்டும் என ஆகி விட்டது

227



மேலும் மேலும்! மேலும் மேலும்! மேலும் மேலும்!
நன்றாக திறம்பட படி! நீ படித்தவைகளை
எல்லோருக்கும், போதனை! செய்வாயாக.
உன் போதனையே! உன் சாதனை என
ஆகிவிட்ட தன்மையாலும்;
சாதனையே! உன் போதனை! என இல்லாமையாலும்;
ஸத்தான! ஸத்சிஷ்யன்!
கிடைப்பது மிக, மிக, மிக, அரிதிலும் அரிதாகும்.

② மண்! பொன்! பெண்! என்ற மூவாசையை!
முழுமையாக விலக்காத குருவிடம்
பாடம்! படிப்பு! பட்டம்! பதவி! கௌரவம்!
அந்தஸ்து! பே......ர்......பு......க......ழ்!
இவைகளை சத்ரு என தள்ளாத குருவிடம்.
இவைகளில் மயங்கிய! மயக்கும்! கு ரு உ ண் டு.



228


பொறுமை! அன்பு! கருணை! பிறர் குற்றம் குறைகளை மன்னிப்பது! மறப்பது! விட்டு கொடுத்து அவர்களை உயர்விப்பது! இவைகளை பாடம் படிப்பாக வாய் ஞானமாக புகட்டும் குரு உண்டே தவிர அனுபவ ஞான குரு இல்லை.

ஸ்ரீபகவானை முழுமையாக நம்பாமல் ஸ்ரீபகவான் ஓர் மாயாபி என ஸ்ரீபகவானை ஏற்காமலும், ஆனால் ஸ்ரீபகவான் கொடுக்கும் போகங்களை ஏற்காத குரு இல்லை.

தன் முழு முந்தவனத்தால்! சாதனை செய்யும் பிறரை கண்டு அவர்கள் மீது போட்டி & பொறாமை! கொள்ளாத குரு இல்லை.

விஸ்வத்வத்தினை எதிர்ப்பும்! தன் வளர்ச்சியால் எதிர்பார்ப்பும்! இல்லாத குரு இல்லை.

229



சுருங்கக் கவி! குற்றம் நீங்கிக் கவி!

கற்றபடி நிலி! (அனுபவி)

நீ அனுபவித்ததை போதி! என சொல்லும் குரு இல்லை.

16 கலைகளில், ஆத்மவித்தையை!

மட்டும்! ஏற்கும் குருவும் இல்லை. (பணம்)

பாடம்! படிப்பு! பட்டம்!


ப……ரு……லி!

இவைகளில், சிக்காத குரு இல்லை. ஆகையால்,

ஸத்தாண! ஸத்குரு இல்லை.

ஸாமான்யகுரு உண்டு.


குறிப்பு:- குரு நிலையை! தாழ்த்தி பேசவாகாது என்பது ஆன்றோர் வாக்கியம். ஆனால் இங்கு உண்மைத்துவது.





குருவை தாழ்த்திக் கூறவில்லை? அதை
மனம் படைத்தவர்களுக்கும்! வித்வான்
களுக்கும்! பண்டிதர்களுக்கும்! பொதுவாக
ஸாஸ்திர வா ப னி! உள்ளவர்களுக்கும்
வேதம் தோற்றவராம். அவர்கள் மனமும்
புண்பட வேண்டாம் என்று, அவர்கள் பாதம்
பணிந்து! இந்த ஏழையை மன்னிக்க வேண்டுகிறேன்.
ஸ த்தி ய ம்! உரைப்பவனுக்கு பயம் வேண்டாம்
ஆனால் அவனுக்கு! ப......ணி.....வு! வேண்டும்.

3 இந்த உதவாக்கரை ஏழை வைத்தியம்!
அதுவாகிய (ஸத்குருவாகிய) அவன் (ஸ்ரீபகவான்)
கருணையினால், வேதாந்த நூல்கள்! அனேகம் பயின்
றிருந்தாலும் (பக்தி = ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர்!
ஞானம் = ஸ்ரீபகவத்பாதாள் ஸ்ரீ ஆதிசங்கரர்!)
ஸ்ரீஸத்குரு கிருபையால்! நிலைத்து நின்றது.





# சிவரகஸ்யம்

சிவரகஸ்யம்! என்ற ஸ்வயருண ஐபவ நூல் ஆகும்.

அ.....வ.....னு.....டை.....ய

மூன்று வரவிலும்! சிவரகஸ்யமே அவனுடைய எனு அறிக. அவனே சிவரகஸ்யமானவன் என உணர்க.

சிவரகஸ்யமே! அவன் வடிவமாக இருப்பதினாலும்

இதை...இப்படி...அவன்...நிலைக்காக...எழுதுகிறேன்

பூர்வ புண்ணியம்! சிரேஷ்டமாகி! அதுவே!

சுகிர்தம்! என்ற தர்மமாக மாறியவர்களுக்கே


இந்நூல்! அவர்கள் கையில் கிடைக்கும்.

அதிலும்: (கிடைத்தால் மட்டும் போதாது)

சிரத்தா நம்பிக்கையின்! வைராக்கியம் உள்ள


அனுபூதி! நிஜ அடியவர்களுக்கே! பலன் தந்து! ஜீவன் முக்தி! பெறுவார்கள் அவன்.

என்று வாழ்த்தி ஆசி வழங்குகிறேன்





4) இக்கலியுகத்தின், கடைசியான காலமான; கலி தோஷ குணமும் & மன குணங்களும் (தம்பி) (அண்ணா)! இணைந்து மடிந்திருப்பதால்; எதிர் பார்ப்பே! ஆன்ம சாதனையாக! அமைந்து விட்டதாலும்; முற்கவனத்தால்! போட்டி & பொறுமையே! நிறைந்திருப்பதனாலும்; நான் எனது! உடைமைத் தன்மையாலும்; குறிப்பாகவும்! முடிந்த முடிவாகவும்! காம (பெண் மோகம்) காஞ்சனம்! (பண மோகம் & புகழ் மோகம்) அனைவரையும் மூழ்கடித்திருப்பதால்; அத்வைதத்தை! ஏற்பவர் வெகு வெகு! வெகு வெகு! வெகு வெகு! குறைவாகும். (இல்லையென்றே சொல்லலாம்)




ஆகவே இந்த நூல் பிரபலியமாக வில்லை.

ஆகவே இதுமறைவருத்தமே. அறிவின்வருத்தமல்ல.

ஆ ற லி?

சிவரகஸ்யமே/பிரம்மரகஸ்யம்/

பிரம்மரகஸ்யமே/சிவரகஸ்யம் ஆகும்

அதுவே/ஸ்ரீமத்ரிபுகீதை ஆகும்/

ஸ்ரீமத்ரிபுகீதையே/அது ஆகும்.


ஸ்ரீமத்ரிபுகீதையே/ஸ்வயஞானா

னுபவமாகும்/ஸ்வயஞானானுபவமே


யாமும்/நீங்களும்/ஆகும் எனஇதை

உபதேசபாடலை நிறைவு செய்கிறோம்.

ரிபு பா பா.




108 ஸ்வயஞானானுபவ பாடல்களின்! சிறப்பு:
ஆதிக்கும் ஆதிநூலாகிய, சிவரகஸ்யம்!
என்ற, ஸ்ரீமத்பகவத்கீதையின்! மறுவடிவமான,
ரத்தின சுருக்கமான!
ஸ்வயஞானானுபவ நூல்!
இறை & பர / கருணையால்!
தொகுக்கப்பட்ட ஒன்றாகும். அந்நூல்!
உபதேச கருத்துக்களானது, அந்தாதிபோன்று
வரிசையாக, தொகுத்த நிலையிலும், எளிய
தமிழிலும்! உடனே கருத்தை புரிந்துணரும்
நிலையிலும்! உள் ஆழ்ந்த நிலையிலும்! உணர்ந்து
படிக்கும், ஆனந்தானுபவ நிலையிலும்!



சுகமாகவும்! சுலபமாகவும்! ஸ்வயமாகவும்!
படிப்பதற்கும்! கேட்பதற்கும்! உடனே
அனுபவம் பெறுவதற்கும்! ஏற்ற நூலாக
இருப்பதால், இதை **ஸ்வயஞானக்கனி!**
என ஆதி ஸ்ரீ மஹான்கள்! சொல்ல கேள்விப்படுகிறோம்!
ஆகவே இந்த ஞானக்கனி! ஸ்வயஞான அனுபவ நூலின் புஸ்தகம்
(பார்ப்பதில் அழகுடன் சுவைப்பவர் உடனே பலன் பெறுபவர்)
எவர் கையில்! இருக்கிறதோ! அவர் பாக்கியவானே
ஆனால், அக்கனியை வைத்திருப்பதில் சிறப்பு உண்டு
அதனால் பிறவாநிலை (ஜீவன்முக்தி பெற) முடியாது
அக்கனியை சுவைத்து உண்டவர் எவரோ?
அவரே! **ஜீவன்முக்தி!** பெறுபவர் என்று
இறை & பர கருணையாலும்! ஆதி ஸ்ரீ மஹான்களின்
அனுபவவாக்காலும்! உணர்கிறோம்! உணர்ந்திருக்கிறோம்!
**கவனம் தேவை!**

தி இ பாபா
இருப்பது ஒன்றே.
நடப்பது நவமே.



# பழம் தோற்றினால்! சுவை தோற்றாது.
# சுவை! ,, பழம் இராது.

Ⓐ பழம் தோற்றினால், சுவை தோற்றாது :-

நாமரூபம்! தோற்றும் வரை, சர்வார்ப்பணம்!

**மெய்ஞானமாக!**

இருக்கும். அதனால் நாமரூப! ஜகஜீவ! உறவு சுற்றம்!

பொன் பொருள் போகம்! இன்பச் சுவை மிகுந்த

**பழமாக!** தோற்றும்.

Ⓑ சுவை தோற்றினால், பழம் இராது :- உன் ஸ்வய

அனுபவ, சர்வார்ப்பணத்தால்! எல்லாம் பழமை காரணத


மாறி, அதுவே உன் ஸ்வய. அனுபவ பிரம்மார்ப்பணத்

தால் எல்லாம் **மணி!** ஆதியாமே! பரமாத்மாவாமே! தானே!

என உணர்ந்து விட்டால்! இதுகாறும் நிலவிய

நாமரூப பழம்! நாசமாகும். சுவையின் ஆனந்தம்!

ஸ்வய அனுபவமாகும்.




109

# நிதாகனின் அநுபவம்!!


அறியவொண்ணா பெருமையுறும் போதம் பெற்ற,
குருதேவா! நினது திட கருணையாலே,
நியமதிபொருந்தியதாம் சிறுமை நீங்கி,
சின்மயிவா அகண்டபரிபூரணமானேன்.
பெற அரிதாம் நின்னுடைய தரிசனத்தால்,
பிறவி இதில் பெறுவதெவ்வாம் பெற்றேனேன்.
உற அரிதாம் உனதருளால் செய்வதெவ்வாம்,
உளமறச் செய்து முடித்தோனுமானேன்.

கருத்து:- ஸத்குருதேவா! ஸத்தியசொரூபா! சாந்தஸ்வரூபா! தயாநிதே! தயாஸிந்தோ! கருணைக்கடலே! காருண்யமூர்த்தே! கிருபாசாகரா! ஆனந்த அமுதே! ஆனந்தஸ்வரூபா! பிரம்மானந்த சாகரா! பவசாகரத்தின் கலங்கரை விளக்கே! ஸத் சித் ஆனந்த எல்லையற்ற சமுத்திரமே! முதலில் இந்த ஏழையின் பணிவான நமஸ்காரங்களை ஏற்றுக் கொள்ளுங்கள் பிரபோ!!!



238

உம் பரம கிருபையினால்! உம் கருணையின்
பார்வையினால்! கிருதார்த்தனனேம்.
எம் கவனக் குறைவினால்; இதுவரை எம்மிடம்
இருந்த; மனம்! புத்தி! சித்தம்! அஹங்காரம்!
இவைகளின், மொத்த உருவமான சிறுமதி
சொந்த பந்த பாசபற்றின் புத்தி
நாசமாகி விட்டது பிரபோ. அப்புத்தி நாசத்தால்
நாமரூப புறச் சின்னங்கள்! நாசமாயின
சின்னங்கள்:- ஜாதி! மதம்! இனம்! மொழி!
நாடு! இவைகளின் அபிமானச் சின்னங்கள்.
அதனால் அகண்ட பரிபூரண நிலையை அடைந்தோம்.
மனம் படைத்த இம்மனுஷ்ய ஜன்மா! எடுத்த பயன்
அடைந்து விட்டோம். மனிதனாகப் பிறந்த
ஒருவன்! என்ன செய்ய வேண்டுமோ!
அதை குறைவின்றி செய்து முடித்து விட்டோம் ஐயா!






**110**

கருணையினால் அருளிய நின் உபகாரத்தில்,
கைமாறு இவ்வுலகில் எங்கும் இல்லை.
குருபரனே! உமதுபய பாத இப்போதைக்கு,
குறித்தடியேன் அனந்தவித வணங்கல் செய்வோம்.
பரிவுடனே வணங்குதலும் உபசாரந்தான்.
பரமார்த்த தசையிலொரு வணங்கலுண்டோ?
சர்வமுமே பிரம்மமல்லால் பரமார்த்தத்தில்,
சற்றுமொரு பேதமுமே இல்லையன்றோ?

கருத்து:- ஐயா! நீ உன்கருணையோடு செய்த இந்த ஜீவ உபகாரத்திற்கு! பிரதி உபகாரம் செய்யத்தக்கதொரு பொருள் இல்லையே ஐயா.

எம்மால்! உம்மை! வணங்கத்தான் முடியும். வேறென்ன முடியும் ஐயா?

அப்படி யாம்! உம்மை வணங்கினாலும், அதுவும் ஓர் உபசாரமே யாகும்.




240

பரமார்த்தத்தில், துவைதம், இல்லை.
" அத்வைதம், தான் உண்டு.
ஆகவே எம் வணக்கமும், பொருந்தாதே ஐயா!
அபேத நிலையில், இருமை இல்லை.
ஆகவே, வணங்குபவனும் இல்லை.
வணக்கத்தை, ஏற்பவனும் ".

111


தேசிகா! நின் கருணையினால் யாம் அடைந்த,
திவ்யமாம் ஸ்வய அனுபவ திருஷ்டி தன்னில்,
பேசியிடும் யாமும் இல்லை. நீயும் இல்லை.
பெருமை யுடன் பேசிய இந்த நாவும் இல்லை.
பாசமுறும் ஜீவனில்லை. ஈசனில்லை.
பகுப்புற்ற பார்முகவாம் ஜகத்தே இல்லை.
ஆசிரியா! அகிலமுமே அகண்டாகார,
அத்வைத பிரம்மமதில் வாவி அயலே இல்லை.

# நிதாகனின் அனுபவம்



2+1

கருத்து:- ஐயா! உம் உள் ஆழ்ந்த உபதேசத்தின்படி,
இருமையில்! எ வ ரு ம்! எ து வு ம்!
இல்லாமையால்; உபதேசம் அருளும் நிலையில்
நீயும் இல்லை. " கேட்கும் நிலையில்
யானும் இல்லை. சுத்த அத்வைதத் தை உணர்த்திய
இந்நூலும் இல்லை. நாமரூபமாக தோன்றிய இந்த
உலகமும் இல்லை. உலகைப் படைத்தோம், என்ற திரி எந்த
கர்த்தாக்களும் இல்லை. சொந்தபந்தத்தில் சிக்கிய
ஜீவர்களும் இல்லை. பார்க்கும் இடம் எங்கும்
நீக்கமற ஊசி நாட்ட இடம் இல்லாநிலையில்
பரசொரூப! வெட்டவெளியே ஒ ளி யே
பரவியிருப்பதாக உணர்கிறேன் ஐயனே!




242

112


ஸத்குருவே! நினதருளால் அகண்ட ஞானச்
சத்ருவாம் அஞ்ஞானம் அனைத்தும் நீங்கி,
நிர்க்குணமாம் பரப்பிரம்ம ஞானம் பெற்று,
நிகிலவித கர்மத்தும் சிரத்தையற்று,
துர்க்குணமாம் பிரபஞ்சத்து உண்மை நீங்கி,
துவைதத்தால் தொடரும் பயம் அனைத்தும் நீங்கி,
அக்ஷரமாம் பரப்பிரம்ம சொரூபமாகி,
அயவற்ற அபயபதம் அடைந்தோமன்றே.

கருத்து:— ஹே கருணா ஸாகரா! கிருபாநிதே! உம்முடைய திடமான கருணையினால் எம்முடைய சிரத்தை இன்மையான அஞ்ஞானம் கவனக்குறைவு நீங்கியது. இந்த அஞ்ஞானமே எம் ஜன்ம சத்ருவாகும். அது சர்வ நாசமான தன்மையால், குணாதீத நிர்க்குணம் பிரகாசிக்கிறது ஐயா.





இந்த நிர்க்குண விசேஷத்தால், நிதாகனும்
கர்மாவால், சித்தம் இல்லை ஐயனே. அதன்
காரணம்:- நான்! என து! இல்லை.
அதனால் உடைமை & உரிமை! போட்டி & பொறாமை
இல்லவே இல்லை. இதன் காரணம்:- நான்/எனது
அற்ற தன்மையால், மனம்! மாயாவோடு! இணைந்து
கொண்டது. மாயாவும்! மனமும்! இணைந்து செயல்
படுவதால், ஆத்மா வாகிய எமக்கு!
அங்கு கவனம்! இல்லை. எமக்கு அன்னியம்
எதுவும் இல்லாமையால், துவைத பயமில்லை.
இயல்பாக நடைபெறுவதால் யாம் ஏன் புக வேண்டும்?
ஓம் காரம்! என்ற பிரணவ நாலில்! அனைத்து அண்ட
ரங்களும் (வரிசை வாரியாக) விதவிதமாசி மணி போல்,
கோர்க்கப்பட்டு அவை நமக்குப் பிரம்மமாய்! இலங்கு
கின்றன (அசைகின்றன) ஆகவே அங்கு விகாரம் இல்லை.
நாம ரூப அசைவுகள், மாயா & மனதின் விளையாட்டு.
ஓசைகள் யோகமாயாவான பிரணவத்தின் ஒலியேயாகும்.




அந்த நாமரூபங்களோ! பிரணவத்தின் ஒளியோ
யா மு ம்! அவ்வ! எ ம து ம்! அவ்வு!
அகவே பிரம்மானந்த மயமே! எம் சொரூபமாகும்
ஐயா! என உணர்ந்த தன்மையால் போக்கெலாவு
அற்ற நிலையால், சும்மா சுகமாக இருக்கிறோம் ஐயா!

**113**

குருவர! நின் கருணையினால் கண நேரத்தில்;
குறைவு தரும் பேதமதை அனைத்தும் நீங்கி;
சர்வமுமே பிரம்மமென்னும் நிச்சயத்தை;
சாலவுமே திடமாக சார்ந்தோமன்றோ.
பரவிய இவ்வுரமான நிச்சயத்தால்;
பரமான எம்மிடையே யாம் சாந்தமாகி;
பிரவ பவதுக்கங்கள்! அனைத்தும் நீங்கி;
விமல பரம ஆனந்தம் அடைந்தோமன்றோ!

# நிதாகனின் அனுபவம்




245

கருத்து :- ஓ பராத்பரா! பரமதயாளா! ஞா பரம்பொருளே! ஒரு வினாடியில்

ஒருவினாடி :- கனவில் தொடர்ச்சியாக பலமணி நேரம், அனேக காட்சிகள் கண்டாலும் கண் விழித்த, மறுவினாடியே! எல்லாம் பொய் என, உணர்ந்து விடுகிறோம். அதே போல் நனவின் நிலையில் நம் கவனக்குறைவால்! அஞ்ஞானத்தால் நடைபெறுவதைப் போல் தோன்றும், அனைத்து நாமரூபகாட்சிகளும்! ஞான விழிப்புணர்வால் மறுவினாடியே, பொய் என உணரமுடியும். எக்காலம்வரை நடந்த அனைத்து நாமரூப நிகழ்ச்சிகள் எந்த தடயமும், இல்லாமல் அழிந்து விடும்.

(ஆஸ்வய அனுபவ சாக்ஷாத்காரம்)




(அதுபோல்)

அனித்த நாம ரூப! ஜகத் ஜீவ! தோற்றங்கள்
எல்லாம், கனவின் காட்சி! யென மறைந்துவிட
எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய யானே!
என்ற, அகண்டமான பர பாவனையால்! எல்லாம்
யானே என்ற நிறைந்த பாவனையின், மகத்துவமானது,
மஹா சாந்தியும்! மஹா மௌனமும்! பிரம்மா
னந்தம் நிறைந்த தன்மையால், மனதினுள் ஐய,
சந்தேக, கலக்க, பய துக்கங்கள் தீர்வதாகுமாயின.

114

இதுவரையில் அஞ்ஞான பகையால் கெட்டோம்.
இன்றுனது கருணையினால் அபயம் பெற்றோம்.
இதுவரையில் மனமென்னும் பகையால் கெட்டோம்.
இன்றுனது கருணையினால் மனதே அற்றோம்.
இதுவரையில் கருமி என்னும் மதியால் கெட்டோம்.
இன்றுனது கருணையினால் கலக்கம் அற்றோம்.
இதுவரையில் ஜீவனென்னும் மதியால் கெட்டோம்.
இன்றுனது கருணையினால் சிவமே ஆனோம்.


# நிதாகனின் அனுபவம்



247

கருத்து:- ஹே சாந்த சிவரூபா! சத்திய சொரூபா!
ஸ்ரீ குரு வார்யா! மிகவும் மகத்தான உண்மை கேளும் தேவா
சென்ற விநாடி வரை, அறியாமையின் திரை மூடியிருந்தது.
இந்த விநாடி, ஸ்வய ஞானம் பிரகாசிக்கிறது.
சென்ற விநாடி வரை, குற்றம் குறை மனது பிடித்திருந்தது.
இந்த விநாடி மனம் மகத்தாகி, அறிவு பிரகாசிக்கிறது.
சென்ற விநாடி வரை, அஹங்கார மமகாரம் பிடித்திருந்தது.
இந்த விநாடி, துக்கமயமற்ற ஆத்மானந்தம் பிரகாசிக்கிறது.
சென்ற விநாடி வரை, ஜீ வ தி ரை! மூடியிருந்தது.
இந்த விநாடி, சி வ மே! நாம் என்ற அனுபவம் பெற்று விட்டோம்.

115 யாம் முன்னம் அறிவிலனாய் அலைந்து நின்றோம்.
யாம் இன்று ஆன்மா என்று அறிந்தோமானோம்.
யாம் முன்னம் தேகமென தியங்கி நின்றோம்.
யாம் இன்று திருக்குரு என்று அறிந்தோமானோம்.
யாம் முன்னம் சித்தமென சலித்து நின்றோம்.
யாம் இன்று சின்மயமென்று அறிந்தோமானோம்.
யாம் முன்னம் நிதாகன் எனவே நின்றோம்.
யாம் இன்று சிதம்பரமென்று அறிந்தோமானோம்.




248

கருத்து:- ஹே ஸத் சித் ஆனந்த ஸாதகனே!

சென்ற விநாடி வரை, அறிவில்லாத புத்திசாலியாய் இருந்தோம்.
இந்த விநாடி, ஸ்வயம் பிரகாச ஆன்மாவாய் பிரகாசிக்கிறோம்.
சென்ற விநாடி வரை, தேகமே நான் என மயங்கி இருந்தோம்.
இந்த விநாடி, சாட்சி சைதன்யமாய் பிரகாசிக்கிறோம்.
சென்ற விநாடி வரை, சலிக்கும் சித்தமாக இருந்தோம்.
இந்த விநாடி, சின்மய சொரூபமாய் பிரகாசிக்கிறோம்.
சென்ற விநாடி வரை, தேகாத்ம புத்தியினராய் இருந்தோம்.
இந்த விநாடி, ஸ்வப்ர சொரூபமாய் பிரகாசிக்கிறோம்.


116 நினதருளால் மனதிலுள்ள சந்தேகங்கள்,
நிகிலமுமே நிமிஷத்தில் நீங்கிற்றன்றே.
நினதருளால் மனதிலுள்ள பவபாசங்கள்,
நிகிலமுமோர் நிமிஷத்தில் நீங்கிற்றன்றே.
நினதருளால் ஜீவ, பர, ஜகத்தென்னும்,
நிகழ் மயல் நிகிலமுமே நீங்கிற்றன்றே.
நினதருளால் நிகிலமுமே பிரம்மமென்னும்,
நிச்சலமாம், நிச்சயமே நிலைத்ததன்றே.



249

கருத்து:— ஓம் ஐயனே! ஸத்குரு பராத்பரா!
இதுவரை சந்தேகம் என்னும் சர்ப்பம் தீண்டியதால்
காமம்! கலக்கம்! குழப்பம்! இவைகளால் பயமுற்று!
கொண்டு அமைதி அற்றிருந்தோம். இன்று சுத்த
ஸ்படிகம் போல் தெளிந்திருக்கிறோம். அத்துடன்
பந்தால் சொந்தம், பந்தம், பாசம், பற்றில் மயங்கி இருந்தோம்.
இன்று ஒரு நொடியில் சூரியனைக் கண்ட பனி போல்
பறந்தோடி விட்டது. சென்ற நொடி வரை ஜீவ,
பயம், ஸம்சயம், மயக்கம்! கொண்டிருந்தோம். இந்த
நொடியே, அனைத்தும் கானல் ஆவமென மறைந்துவிட்டது.
ஆகவே எல்லாம் பிரம்மமே! அதுயாமே! என அளவற்ற
ஆனந்தமாய் பிரகாசித்தனர்.


117 நிகிலமெனத் தோற்றுவதும் சித்தம் தானே?
நினைகருவாம் சித்தமதே பிரம்மமாயிற்று.
அகிலமுமே பிரம்மமதாம் அது நாம் என்னும்
அகண்டபரபாவனையே செய்து இங்கு அதனால்,
சகலமென்னும், நாம் என்னும், பேதம் நீங்கி,
சலனமில்லா அகண்டபர நிஷ்டை கூடி
பகரவொண்ணா, பவபாசம் அறுத்துத் தள்ளி,
பங்கமில்லா பரப்பிரம்மம் ஆனோமந்தோ!




கருத்து :- நாமரூப, ஜகஜீவ, தோற்றமாகத் தெரிவ
தெல்லாம், எம் சித்தமாகும். உம்பரம கிருபையால்,
கண்ணோக்கில், எல்லாம் பிரம்மமாகி விட்டது. எல்லாம்
மண்ணே. மண்ணாகிய மனமே, பரமாகிய யானே, என்ற
அகண்டபரமானவன், செய்குதனை, உலகம், என்றும்,
ஈசன், என்றும், யாம், என்றும், தோற்றிய பேதம்
எல்லாம், ஜீவநாசமாகியது, வாக்காலும்,
வரியாலும், விளக்கவொண்ணு, பரிபூரண பரப்பிரம்
மமாய், பிரகாசிக்கிறேம். ஐயா!

**118** தூலமெனத் தோன்றியதாம் உடலும் காணேம்.
சூட்சுமமெனத் தோன்றியதாம் உடலும் காணேம்.
மூலமெனத் தோன்றியதாம் உடலும் காணேம்.
மோஹமெனத் தோன்றியதாம் ஒன்றும் காணேம்.
தாலமொடு தேசமுதல் எவையும் காணேம்.
கற்பிதமாய்த் தோன்றியதோர் அணுவும் காணேம்.
சாலவுபசாந்தமதாய்ச் சலனமின்றிச்
சின்மயமாம் பரப்பிரம்மம் ஆனேமையா!

## நிதாகனின் அனுபவம்



251


கருத்து :- இப்பாடலில் ஓர் முக்கியம் இருக்கிறது.
அது யாதெனில் :- (A) நனவில் நாமே பொருள்கள் தேடிச் செல்கிறோம். (B) கனவில் ,, ,, கள் நம்மை தேடி வருகின்றன. (C) ஆழ்ந்த உறக்கத்தில் ஆன்மாவுடன் (மனம்) இணைந்திருக்கிறது. அதுவே உறக்கம்.

(A) காணும் நிலையில் / தூ ல ச ஞ் சா ர ம்
(B) சூக்ஷம நிலையில் / ம ன எ ண் ண அலைச்சல்.
(C) அ தி சூ க் ஷ ம நிலையில் / ஓர் இ ணை ப் பு.

முன் இரண்டில் / தூலம் (வினை) சூக்ஷமம் (மனம்) ஆகிய இரண்டின் விளையாட்டு. ஒன்று வினையோடும் மற்றொன்று வினை இல்லா நிலையிலும் நடைபெறுகிறது.


இதை உணர்வது ?

நனவில் வினை உடல் சஞ்சாரத்தால் வினையின் பற்றுதலை தொடர்கிறது. கனவில் வினை உடல் இல்லாமல், மனோ சஞ்சாரத்தால், சஞ்சலம் உண்டாகிறது. வினையின் பற்று அளவு தொடர்பு இல்லை.



252


இதில் ஓர் சூக்ஷ்மிய உ ண ர் வு! என்னவென்றால்
ஸ்ரீ ஸத்குரு கிருபையினால் பெற்ற சர்வார்ப்பணமும்!
பிரம்மார்ப்பணமும்! முறையோடு செய்த அனுபவத்தால்
யோகமாயாவில்! போகமாயா! ஒடுங்கி விடுகிறது
போகமாயாவில்! ஸங்கல்ப விகல்ப ம ன ம்!
குற்றங்குறை கற்பனையால் இருப்புடைய ம ன ம்
ஒடுங்கி மறைந்து விடுவதால், ஜாக்ர!
சொப்பன! சுஷுப்தி! ஆகிய இம் மூ ன்றும்!
(மூன்று உடலும்)
செயலற்று விடுகிறதென ஞானிகள் சொல்வர்.
ஆகவே, அ ம் மூ ன் று! உடல்களையுங் காணோம்
என அறிய வேண்டும். மனம் இல்லாததன்மையால்,
மேறு/பேறும் இல்லை. அவ்வஸ்துக்களும் இல்லை.
ஆகவே அங்கு காலம்! தேசம்! வர்த்தமானம்! நாமம்! ரூபம்
குணம்! குறி! மனம்! வாக்கு! காயம்! ஆகிய



இந்த பத்தும், கடந்தநான் தாவத்தீத
பரசொரூபமே, யாமாக இருக்கிறேம், எம்
ஆனந்த குருதேவா! என ஆனந்த கூத்தாடினேன்.

119 இருமையென பிரம்மமல்லாது எதையும் காணேம்.
இருப்பதெல்லாம் பரப்பிரம்ம வடிவாய் கண்டோம்.
ஒருபொருளும் பிரம்மமல்லால் அயலாய் காணேம்.
உள்ளதெல்லாம் பரப்பிரம்ம வடிவாய் கண்டோம்.
அருவமென பிரிதாகச் சிறிதும் காணேம்.
சகலமுமே பரப்பிரம்ம வடிவாய் கண்டோம்.
குருவரா! அப்பரப்பிரம்மம் யாமே ஆனேம்.
குறைவற்ற நின் கருணையின் மகிமை என்னே?

கருத்து :- இப்பாடலில், இதுவரை உணர்த்தாத கருத்து ஒன்றை, ஸ்ரீ ஸத்குரு, உணர்த்தினார். அதை அப்படியே உணர்த்துகிறேம். கருத்தால் உணர்க. அக்கருத்தை, இப்பாடலின் முன் நான்கு, வரிகளை மட்டும் தந்து பின், அதன் பொருள் தருகிறார்.





அந்த நான்கு வரிகளையும், எளிய நடையில் தரும்
கருத்தாவது :-


① இருமை! என்ற நிலையில் கண்டோம்! கேட்டோம்! உணரும் நிலையில், பிரம்மம் அல்லாமல் எதையும் இல்லை.
(வேதமெல்லாம் மனமே)

② நாம ரூபமாக! கண்டோம்! கேட்டோம்! உள்ளதை அனைத்தும்! பரப்பிரம்ம வடிவாக கண்டோம்.
(வேதமெல்லாம் மனமே)

③ அனைத்து உலகங்களிலும், நாம ரூபமாக, உள்ள எல்லாம் பிரம்மத்திற்கு! அயலாக இல்லை.
(வேதமெல்லாம் மனமே)

④ உள்ளவை எல்லாம்! (காண்பதும்! கேட்பதும்! கொடுப்பதும் வாங்குவதும்! போக்கு வரவும்! அனைத்து நாம ரூபமும்) பிரம்மமாக காண்கின்றோம்.
(வேதமெல்லாம் மனமே)

என எளிய தமிழில்! புரியும் நிலையில்! சுகமாக! சுலபமாக! சுத்தமாக! சொல்கிறார். (உணர்ந்து அனுபவிக்கவும்)





இனி கவனமாக உணரவும்.

(1) காலாதீத பர சொரூபம் | செயலற்ற (இல்லையென்று (அது மண்ணே) சொல்லும் நிலையில்) ப ர நி லை | சுத்தம் | அதாவது ஸ த் தி ய ம். (உண்மை உண்மையாகவே இருக்கிறது)

(2) அதுவே யோகமாயா | சம்பந்தம் கொண்டு, இயக்கத்தின் ஆதாரம் (களிமண் & பொன்) என ஆகும் போது, பேரறிவின் நிலையில் அ த் வை த ம்.

(3) அதுவே யோகமாயா சம்பந்தம் கொண்டு, ஸத்திய தர்மத்தோடு கூடி | தெய்வீக ஈ ச நி லை | சூட்சும நாமம் (ரூ ப ம்) பெறும் போது, அது அறிவின் நிலையில், விஷிஷ்டாத்வைதம்.

(4) அதுவே விஷ்ணுமாயா (மனோ நிலை) சம்பந்தம் கொண்டு, புண்ணிய பாபத்தோடு கூடி | ஜீ வ நி லை யில் தூல நாமரூபம் பெறும் போது, ம னோ வ டி வி ல் த் வை த ம் ஆகும் என அதிஸ்ரீ மஹான்கள் வாக்காக அறிகிறோம்.



காலாதீத அந்த ஒன்றே! இப்படி இறங்கி வந்ததே யல்லாமல், அந்த ஒன்றுக்கு, அயலாக (பராசக்தி! வடிவாக தோன்றி உருவாக வந்தது என உணர்க) எவ்வுருவும்! எதுவும்! இல்லை யென்பதே ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

இதன் உட்கருத்து


(1) இல்லை! (2) இருக்கிறது!
(3) அதுவாக இருக்கிறதும்!
(4) நாம் அதுவாக இருக்கிறோம்

(1) காலாதீதபரம் இல்லை! (2) அதுவே பரமாத்மா (பெண்மை) இருக்கிறது!

(3) அதுவே ஈசனாக இருக்கிறது! இந்த இருப்பு மாயா இணைந்த ஈசன் ஆகும்! (காரணம் அல்லது மோனம்)

(4) அதுவே ஜீவனாக இருக்கிறது! இந்த இருப்பு மாயா மனம் (பாண்டம் அல்லது ஆவரணம்) இங்கு இயக்கம் உண்டு

இந்த நான்கிலும் அந்த ஒன்றே! ஒன்றாகவே இருக்கிறது.




இதை வைத்து உணருமிடத்து?

இப்பாடலில், இருமையென!

பிரம்மமல்லாது! எனையும் காணேம்! என்றால்?

பரமாகிய பிரம்மமும்! ஈசனாகிய பிரம்மமும்! என

இருமையை காட்டி, ஒன்றுபடுத்துகிறார்.

பரமும்! ஈசனும்! இயக்கமற்றதே! இருமை மற்றும் தோற்றமும் ஈசன் உடையவனாகிறான்

மாயாவினால், ஈசன் இயக்கம் உடையவனாகிறான்.

பரமும்! ஈசனும்! இருப்பும்! (மாயாவினால்) இயக்கமே!


உடையவர்களாகி மனதால்! நாம ரூப (குணசம்பந்த) ஜகஜீவ தோற்றமாயினர்.

1 கருத்து :- இருமையும் (பரமும் ஈசனும்) பிரம்மமே.

2 அங்கும் இங்கும் எங்கும் இருப்பதெல்லாம் ,, .

3 எவரும். எதுவும். எல்லாமும் ,, .

4 உண்டு என சொல்வதெல்லாம் ,, .




258

120

ஆசிரியா! நீ அருளும் உபதேசத்தால்,
ஆவரணம்! விக்ஷேபம்! அனைத்தும் நீங்கி,
சாசுவத சுபாவமதாய் சவியாச் ஸித்தாய்,
சதானந்த கனமாகி சகஜான்மாவாய்,
பேசவொண்ணாப் பேரொளியாய் பிரிவில்லாததாய்,
வெளிதக்கும் வெளிதாகி பிரம்மான்மாவாய்,
ஈசன் ஜீவன் எவையுமில்லா அகண்டமான,
ஏக ஸ்திதா கய பரபிரம்மமானேன்.

கருத்து:- முன் பாடலில் கூறியபடி, கருத்துடன்! உணர்ந்த நிலையில், நாம ரூப! ஆவரண மயக்கமானது! எல்லாம் மண்ணே! (மண்ணாகிய பாமே) என, அறிவு பூர்வமாக உணர்ந்தமையால், நான் எனது என்ற, விக்ஷேப கலக்கம் நாசமானது, மனம் மாயாவிலும்! மாயா பரத்திலும்! யாம் பரமாகவும்! அனமறு விதை, வாக்காலும் மனதாலும்! விளக்கவொண்ணா ஈசனும் இல்லாத, ஜீவனும்! பரமும்! யாமே! ஆன அகண்டாகாரப் பேரொளியாய்! பிரகாசிக்கிறேம் ஐயா!




259

121


ஆசிரியா! நீ அருளிச் செய்த வண்ணம்;
அஹம் பிரம்மாஸ்மி என்பதாக;
நேசமுடன் நிரந்தரமாய் தியானம் செய்து,
நிகில மனோ விகல்பமுமே நீங்கினேனாய்;
சாசுவத சொரூபத்தில் நிர்விகல்ப;
சமாதிநிலை, பெற்றவனாய் சாந்தனாகிப்;
பேசவொண்ணா பரப்பிரம்ம போதம் பெற்று;
பெருமைமிகும் பிராமணனும், ஆனேனையா.

கருத்து :— பிராமணன் :— வேதம் ஓதியவன், வேதியன் ஆவன்; பிராமணன் ஆகான். வேதாந்தம் முறைப்படி ஓர் ஸத்குரு மூலமாக, உணர்ந்து, தன்னில் தான், நிலைபெற்றவனே பிராமணனாவான். ஏனையோர், பிராமணனைப் போன்றவராவர். பிராமணனாகார், என்று ஆதிஸ்ரீமஹான்கள் வாக்கால் உரைக்கிறோம்.



260


பிரம்மத்தை! உணர்ந்தவன் பிராமணன்! என்பது;
பிரம்மத்தையே சார்ந்திருக்கப் பட்டவன்!
பிரம்மார்ப்பணத்தோடு கூடியவன்! பிரம்ம
ச்சாரி! என்றும் உணர வேண்டும். அதாவது,
பிரம்மச்சாரி! ஆகாமல் பிராமணன்! ஆகமுடியாது.
அஹம்பிரம்மம்! பிரம்மம் அகம்! என்ற
அஹம் பிரம்மாஸ்மி!
என்ற, பிரம்மானுபாவனை செய்துகொள்.
மறைமைய குற்றம் குறைபாவனை நாசமானது.
சாஸ்வதமாகவும்! சர்வசுதாவும்! அந்த
ஒன்றிலேயே நிலை பெற்று, நிர்விகல்ப சமாதியும்!
அதனிலும் அதீத, சகஜசமாதியும்! பெற்று
வாக்காலும்! மனதாலும்! விளக்க வொண்ணா!
பிராமணனும்! யாம் ஆனோம் ஐயா!



122

பின்னமறக் கருணையினால் நீ உரைத்த,
பிரக்ஞானம் பிரம்மம்! முதல் வாக்கியார்த்தம்,
மன்னும் வண்ணம்! நன்றாக மனதில் கொண்டு,
மாசறவே மற்றதனை மனனம் பண்ணி.
அன்னதனைப் பின்னையுமே அநுசந்தானித்து,
அஞ்ஞான சந்தேக விபரீதங்கள்.
மன்னிடா அகண்டார்த்த போதம் மேவி,
மகிழ் ஜீவன் முக்தனுமாம் ஆனேனையா!

கருத்து:- பிரக்ஞானம் பிரம்மம்:- பிரக்ஞை! என்றால் உணர்வாகும். உணர்ச்சியென்பது நாம ரூப குண தோஷத்தால் விளையும் எழுச்சியும்! வீழ்ச்சியும் ஆகும். இது கோபாவேச சம்பந்த! உங்கள் பாஷையான, எமோஷன்! டென்சன்! ஆகும். இவ்வுணர்ச்சியினால் புண்ணிய பாவமும்! அதனால் ஜனன மரணமும் உண்டாகும்.




262

பிரக்ஞை என்பது அடங்கிய ஆனந்த உணர்வு
(அடக்கியே நடு அவ்வ.)
ஆகும். இது த்...ட...ப்...பி...ர...க்...ஞ...
ஞ...டை...ய / மெய்யுணர்வின் அடக்கமாகும்.

நாம ரூப / உடல் / உலக / உறவின் /

உ...ணா...ர...ச்...சி / வேண்டாம் என்றும்;
சிவகாலம் /
தெய்வ பிரக்ஞையோடு இரு; என்றும்; பின்
ஆத்ம / பரமாத்ம / பரப்பிரம்ம / பிரக்ஞையோ
மெ ய் உ ண ர் வோ டு இரு என்றும்;
கூறுவது இப்பாடலின் முக்கியமாகும்.
ஹே ஸத்குருதேவா! உம் உபதேசமாகிய பிரக்ஞானம்
பிரம்மம் / வாக்கியத்தில் ஸ்திரமாக இருந்து,
அந்த அனுபவத்தால், சந்தேக / கலக்க / கலங்க /
பயதுக்கம் / சர்வநாசமாகி / அகண்டானந்த /
நிலை பெற்று / மகிழும் ஜீவன் முக்தனாகப் /
பிரகாசிக்கின்றேன் ஐயா!




**123**

சிரவணமே முதலியதின் அப்யாசத்தால்;
சிறுமை தரும் தேகாத்ம புத்தி நீங்கி;
பெருமைமிகும் பிரம்மான்ம புத்தி மேவி;
பின்பந்த புத்தியுமே இறந்தொழிகி;
கருதவொண்ணா அகண்டான்ம போகம் பெற்று;
கர்த்ருத்வ முதலான பந்தம் தீர்ந்து;
நிரதிசய ஆனந்தம் அனுபவித்து;
நிதம் ஜீவன் முக்தனும் யாம் ஆனோமையா.

கருத்து:- முன்பாடலில் கூறிய, பிரக்ஞான பிரம்ம அப்யாசு! சிரவண! மனன! நிதித்யாசம்! செய்த தன்மையால், தேகாத்ம புத்தி (உடலே நாம் எனஎண்ணும் புத்தி) நாசமானது. அதனால் பிரம்மான்ம பாவனை (பிரம்மம் நாம் என்னும் அறிவு) மேலோங்கியது. அதுவும் எம் பேரறிவை அவ்வறிவும் நாசமாகி, அகண்டான்ம பாவனை! ஸ்வயமாக அனுபவித்து, எந்த அதிசயமுமற்ற! எம் நிஜரூபம்; ஜீவன் முக்தனை பிரகாசிக்கிறோமையா!

264




124

குறைவின்றி, நிறைவின்றி, குற்றமின்றி,
குணம் குறிகள் முதலியவை எவையுமின்றி,
மறைவின்றி தெரிவின்றி, மனதுமின்றி,
மனோமயமாய், மயக்கங்கள் அனைத்துமின்றி,
பிறிதின்றி, தனதின்றி, பிரிவொன்றின்றி,
பேதமுறும், எவ்வொருளும் ஒன்றுமின்றி,
அறிவொன்றே! வடிவான பிரம்மமாக,
அமைவுற்ற, எம்மஹிமை யென்சொல்வோம் யாம்?

கருத்து:- நாமரூப பேதமோ! பேதத்தால், விருப்பு வெறுப்போ! விருப்பு வெறுப்பால், குற்றம் குறையோ! குற்றம் குறையால், புண்ணியபாபமோ! இவை அனைத்திலும் தோன்றும், விகார! நிவகாரமோ (காட்சி. நிகழ்ச்சி) முதலிய எக்குண தோஷங்களும் இன்றி, சாட்சி! அறிவும்! பின் சர்வசாட்சி! அறிவும்! யாமே ஆன நிலையில், எம் மஹிமையை, வாக்காலும்! வரியாலும்! சொல்ல முடியவில்லையே தேவாதிதேவா!

குறிப்பு:- குணதோஷத்தால் ஹீனமின்ன விரும்பு.


வினையால் ஜனனமரணம் தொடரும். எனைப்பற்றி உணர்க.



**125**


நினதருளால் யாம்பெற்ற அனுபவத்தை.
நிகழ்வுறவே இவ்வண்ணம் நிகழ்த்தவாரேம்.
கனகருணை வாரிதியே! யாம் உமக்கு
கைமாறு! செய்திட இங்கொன்றுமில்லை.
மனதுடனே எமதுடல்! உமக்களித்தோம்.
மற்றதனை நிமிஷத்தில் நீறுசெய்தாய்.
ம ன உ ட லி சா ம் ப லா க் கி னா ய்.
அனகா எமது ஆன்மாவை! உமக்களித்தோம்.
அதனையும் நின் ஆன்மாவே ஆக்கிக்கொண்டாய்.
ஜீவான்மா பரமான்மாவாகி! பரமான்மா பரப்பிரம்மமாயிற்று.

கருத்து:- ஆத்மானந்த குழந்தைகளே! இப்பாடலில்
நம் நிதாகன்! த...ம்... உ...ண...ர்...வி...ன்!
அ...னு...ப...வ...த்...தை...எ...வ்...வா...ம்!
உ...ள்...ள...ங்...கை...நெ...ல்...லி...க்...க...னி...போ...ல்!
பி...ர...த்...தி...ய...ட்...ச...மா...க...**விளக்கி**!
க...ரை...ந்...து...க...வ...ந்...து...வி...ட்...டா...ன்! எனஅறிக.



266


ஹே கருணைக்கடலே! கிருபாஸாகரா! ஆனந்த
பெருக்கே! ஸத் சித் ஆனந்த ஸ்வரூபா!
இதுவரை, உம் பரம கருணையால் பெற்ற ஸ்வய
அனுபவத்தை! சொன்னோம்.
எம்மை நீயாக்கி! உன்னை யாமாக்கி! நாம் இரண்டும்
அதுவாகி! அதுவே நாமாகி! நாம்! எப்படி
இருக்கிறோம் என்பதை சொல்லவொண்ணா!
விளக்கவொண்ணா! ஆனந்த நிலையை, அருளிய உமக்கு,
என்ன கைமாறு செய்வது? எதை கைமாறு செய்வது?
எப்படி கைமாறு செய்வது? கைமாறு என்பதன்
பொருள் என்ன? யார் யாருக்கு செய்வது? அங்கு
கைமாறு செய்பவர் யார்? வாங்குபவர் யார்?
உம்மை தனியாக! காண முடியவில்லையே பிரபோ!
எமக்கும் தனியே இருப்பு இல்லையே ஐயனே! இப்படி நாம்,
இருவரும்! கேவலமாக! போய்
விட்டோமே ஐயா! நாம் இருவரும் முன்பு எப்படி
இருந்தோம்? இன்று என்னவானோம் என தெரிய
வில்லையே ஐயனே?






உலக பழக்க வழக்க, வாக்கின்படி சொல்வது,
ஓர் ஸத்குருதேவரிடம்! அவருடைய, ஸத் ஸிஷ்யன்!
தன், உடல்/பொருள்/ஆவி! ஆகிய
(சரீரம்! சரீர உடைமை! பிராணன்) இம்மூன்றையும்
முழுமையாக, அர்ப்பணம் செய்ய
வேண்டுமென்பது, ஓர் விதிமுறையாகும்.
இது ஸ்ரீ கவியான், பயிற்சி உள்ளவர்களுக்கே
பொருந்தும் ஐயனே! ஆனால் ஆத்ம ஸத்தையின்
அனுபவம்! பெற்றவனுக்கு பொருந்தாது, என்பது
தாங்கள் திருவாக்கால், உணர்ந்திருக்கிறேன்.
அந்நியமாய் பார்த்தால், தாங்கள் எனக்கு!
கொடுத்த அனுபவத்தின்படி, எல்லாம் மண்ணே!
என்பதில்
நீயும் மண்! யானும் மண்! எல்லாம் மண்ணே!
இன்று நாம ரூபமாக! தோன்றுவது நாளை சாம்பல்
ஆகும். சாம்பல் = தாஸி! தாஸி = பரமாணு!
பரமாணு = ஆத்மா! ஆத்மா = பரமாத்மா! பரமாத்மா =
பரப்பிரம்மம்! இப்படி ஒன்றுக்கு ஐக்கியமான நிலையில்

268




நாம் இருவரும் ஒன்றான நிலையால், உம்மை!
என்று தரிசிக்கும் பாக்கியம் கொடுத்தாயோ,
அன்றே! இத்தாவம் சாம்யவ்!
என ஆகிவிட்டது. ஆன்மாவை உமக்கு கொடுத்
தோம் என்றால், அதுவும் இயலவில்லை. காரணம்:—
நாங்கள்! பிரம்மானந்த, சமுத்திரம்.
யாம்! அறிவு, ஓர் திவலை! ஆகும்.
இங்கே உம்மையன்றி, யாம் தனியே இல்லை.
எம் ஆன்மா! என சொல்வதற்கில்லை. எல்லாம்
உமதே! நீயே! யாம்! யாமே! நீ!
இப்படி பகுப்பற்று! கேவலமாகி விட்டோமே ஐயா!

இதன் ஓர் குறிப்பு எதாகில்?
எண்ணமே மனம்! மனமே எண்ணம்! மனமே புண்ணிய
பாவம்! புண்ணியபாவமே! தூலஉடல். அம்மனதை
உம்மிடம் முழுமையாக அர்ப்பணித்ததால், மனமும்
மன உடமையும்
நாசமானது. மன உடலும் நாசமானது குருதேவா.




269

126

இனி யென்ன கைமாறு செய்வோம்? எவ்வாறு,
இருமையில்லா நினது நிஜ சொரூபம் தானே?
அனியமில்லா நீயாமாய்! யாமே நீயாய்!
அமர்கின்ற ஐக்கியமாம் ஆழியின் கண்.
அணியுமகம் பிரம்மாஸ்மி! ஞானந் தானே.
யாம் மூழ்கி ஒன்றாக கலந்தோமன்றே.
தனியுருவாய்! தான் தானாய்! தனித்த இந்த!
நிலைமை தனில்! நமக்கயவோரணுவும் உண்டோ?

கருத்து:- ஓ ஆனந்த கிருபாசாகரா! மனம் எண்ணமாகும். எண்ணம் வினை ஆகும். வினை உடலாகும். அது உம் கிருபையால், சாம்பல் ஆனது. ஆன்மா என்பது தனியே இல்லை. அங்கு அதுவே நீ! நீயே யாம்! யாமே நீ! என ஆகி விட்டதால், கைமாறு என செய்வதற்கு, இங்கு ஒன்றும் இல்லை. இ ரு மை ய ற் ற / ப ர ப் பி ர ம் மா ன ந் த ச மு த் தி ர த் தி ல் / நாம் இருவரும் ஒன்றாக கரைந்து / கலந்து விட்டோம் ஐயா! தனித்தனி இருப்பு / நாம் இருவருக்கும் இல்லை ஐயனே!

270




127


ஆதலினால் யாம் கைமாறு அளிப்பதற்கும்.
அதனையடைந்து எங்கணும் நீ / போவதற்கும்;
ஏதுமில்லை; எப்போதும்; எவ்விடத்தும்.
இருப்பதெல்லாம்; ஏக ஸிதாகாயம் தானே?

ஓதியவாறு, ஓரணுவும் அயலில்லாததால்;
ஒன்றானநீ / உபதேசம் செய்வதற்கும்
ஏதிதனை யாம் / இனிமையுடன் கேட்பதற்கும்
இடமில்லை; இவ்விசித்திரம், என்னே ஐயா?

கருத்து :- கைமாறு / கொடுக்கும் பொருளும் இல்லை.
கைமாறு / கொடுக்கும் யாமும் / தனியே இல்லை.
கைமாறு / பெறும் நீயும் / தனியே இல்லை. அப்படியே
யாம் கொடுத்த நீ வாங்குகிறாய் / என வாக்கினி
யில் சொன்னாலும்; நீ எங்கு போவாய்?
கொடுக்கும் யாரும் இல்லை. வாங்கும் நீயும் இல்லை.
கைமாறின் பொருளும் இல்லை. அப்படியே நீ
வாங்கினாலும் / நீ செல்லும் இடமும் தனியே இல்லை.
காரணம் :- எல்லாம் மண்ணே / யாம்! நீ! எல்லாம் /
மண்ணே (பிரமே) மண்ணுக்கு அன்னியமாய் எதுவும் இல்லை.





ஸிதாகாயம் :- ஸித் + ஆகாயம் = ஸிதாகாயம்.
அதாவது
ஸத்தும் ஸித்தும் ஒன்றே, சக்தியைப் போல் கூட அளவு இலவம்
இங்கு சக்தியத்தை குறிப்பிடவில்லை. ஆகாயத்தை, குறிப்பிடுகிறார்.
எங்கும் பரந்து விரிந்த, ஆ கா ய மு ம், ஒர் குடத்தினுள் உள்ள, " ,
ஒன்றே என உணரவும். இங்கு குடமே உபாதை (வேதம்)
எங்கும் பரந்து விரிந்த ஆகாயமும். (மனிதர்களையும் சேர்த்து) அனைத்து ஜீ வ
கோ டி க ளு ம், உறையும் ஆகாயமும் ஒன்றே.
(ஆகாயத்தை, பரமாக உணர்ந்து, அனுபவம் பெறவும்)
அந்நிலையால் யாமும்! நீயும், எவ்வாமும்!
ஒன்றாக ஐக்கியமாக உணரும் போது. நீ, எதை
உபதேசம் செய்வாய்?
யாம், எதை கேட்போம்?
யாமும் இல்லை. நீயும் இல்லை எவ்வாம் பரமாகிய
மண்ணே, மண்ணாகிய பரமே, பரமாகிய யாமே,
பரமாகிய, யாமும், நீயும், ஆகும் ஐயனே.




272

முன் பாடலின் ஓர் குறிப்பு:- நீ எனைச்
சொல்லப் போகிறாய்? யாம் எப்படி இருந்து
கேட்கப் போகிறோம்? என வருகிறது.
இதை சற்று உள் ஆழ்ந்து உணரவும்:-
நாமரூப, ஜகம், விவஹார ஸத்தியமாகும்.
ஒருவர் சொல்ல, ஒருவர் கேட்க; இப்படி
வாக்காலேயே! இவ் உலகம்!
இருப்புடையதைப் போல் தோற்றுகிறதேயல்லாது
ஜகஜீவ! தோற்றத்திற்கு
இருப்பே இல்லை யென்பதே ஸத்தியம்.
இதனைத்தான் ஸ்வய ஞானுப பாடலில் ஓர் இடத்
தில், வரும் வாசகம்:- சொற் பொரு
ளோர்! அனுபவமில்லை, யென்
றெப்போதும்; சும்மாவே இரு
ந்து, மஹா ஸாந்தியாவாய்!
என்று, ஆணித்தரமாய் சொன்னார்.




இருப்பும்! தோற்றமும்! (முறையே) பரமும்! மாயாவும்!
இணைந்த ஒன்றுகூடும் அத் தோற்றத்தை!
இந்த ம ன மா ன து! பலபல வடிவம்
கொடுத்து, இது இன்னார்! இது இன்னது! என்று
நா ம மு ம்! சொல் விளக்கமும்!
ரூ ப மு ம்! பொருளின் இருப்பும்!
கொடுத்து! இம் மாயாமனம்! ஆட்டம் போடுகிறது.
வாக்கின் சொல்லும்! சொல்லின் பொருளும்!
ரூபமும் இணைந்து நான்! எனதாவு! பின்னவிட்டு,
புண்ணிய பாவத்தைத் தேடி! ஜனன மரண
வி ளை யா ட் டு! வி ளை யா டு
கி ற து! (என) இச் ஜீவர்கள் ஆக்காக
அறிந்தோம். சொல்லும் (நாமமும்) பொருளும்
(ரூபமும்) இல்லியாவு இருதன்மை ரூபஜகம்
இல்லி! ....... இல்லி! ....... இல்லி!




ஸத்குருவாய் அருளியிடும் நீயும் இல்லை.
ஸத் சீடனாகியுள்ள யானும் இல்லை.
முக்குணமாய் தோன்றியதோர் பிரிவும் இல்லை.
மூவமதாம் அவித்தையில்லை. மாயையில்லை.
தொடர்புற்ற ஜீவேஸ்வரர் யாருமில்லை.
துர்க் குணமாய் தோன்றியதோர் ஜகத்தும் இல்லை.
நிர்க்குணமாம் பரப்பிரம்ம சொரூபம் ஒன்றே.
நீக்கமற நிலைபெற்று நிகழ்ந்ததன்றே!

